# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2252/45 - 2021 නොවැම්බර් මස 05 වැනි සිකුරාදා - 2021.11.05

*2252/45 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*ச. அ. இல.* : PS/CSA/00/1/14/28

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதியுத்தமராம் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களினால்**

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

1. கௌரவ தம்மிக பிரியந்த சமரக்கோன் ஜயவர்த்தன அவர்கள்
   உயர்நீதிமன்ற நீதிபதி

2. கௌரவ கேமா குமுதினீ விக்கிரமசிங்க அவர்கள்
   உயர்நீதிமன்ற நீதிபதி

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

*1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணக்குழுக்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்வண்ணம் 2021, சனவரி மாதம் 28 ஆந் திகதிய அதிகாரப் பத்திரத்தின் மூலம் விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று தாபிக்கப்படட்டுள்ளதாதலாலும்,*

மேலும், சொல்லப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினரான மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கௌரவ ஆர். எம். சோபித்த ராஜகருணா அவர்கள் மேற்போந்த ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளாராதலாலும்,


1A - G 34901 — 370 (2021/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*மேலும், அதன் மூலம் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்பும் தேவை இனங்காணப்பட்டுள்ளதாதலாலும்,*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும்கொண்டு, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணக்குழுக்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட, தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்வண்ணம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கௌரவ பாலேந்திரன் சசி மகேந்திரன் அவர்களை மேற்சொல்லப்பட்ட அதிகாரப்பத்திரத்தின் வண்ணம் தாபிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இத்தால் நியமிக்கின்றேன்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு நவெம்பர் மாதம் 05 ஆந் திகதியாகிய இன்று கொழும்பில் அளிக்கப்பட்டது.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

***பீ. பி. ஜயசுந்தர,***
*சனாதிபதியின் செயலாளர்.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*